உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# பொருளாதார சேவைகள் கட்டணம் (ESC)

## பொருளாதார சேவைகள் கட்டணம் விதியாகும் ஆட்களுக்கான அறிவித்தல்

2017 ஆம் ஆண்டின் 15 ஆம் பொருளாதார சேவைகள் கட்டண (திருத்தச்) சட்டத்தின் ஊடாக பொருளாதார சேவைகள் கட்டணத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்படுள்ளன.

### பொருளாதார சேவைகள் கட்டணம் விதியாகும் ஆட்கள்

I. வர்த்தகமொன்றை, வியாபாரமொன்றை, உயர்தொழிலொன்றை அல்லது வாழ்க்கைத்தொழிலொன்றை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஆளும் அல்லது பங்குடமையும் வருமான வரிப் பொறுப்புடையவராக இருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும், 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் பொருளாதார சேவைகள் கட்டணம் செலுத்துவது அவசியமாகும்.

II. வரிவிலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள் - கீழே குறிப்பிடப்படும் நிறுவனங்கள் மீது பொருளாதார சேவைகள் கட்டணம் விதியாகமாட்டாது.

அ) கூட்டுறவுச் சங்கங்கள்

ஆ) வதியுநரல்லாத விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் கம்பனிகள்,

இ) உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள்,

ஈ) விநியோகஸ்தர்கள்,

உ) லொத்தர்கள் வியாபாரிகள்,

ஊ) அலகு நம்பிக்கைப் பொறுப்புக்கள் அல்லது பரஸ்பர நிதியங்கள்

### அடிப்படை மற்றும் வரி விதிப்பு எல்லை

I. காலாண்டொன்றிற்காக வரிவதியாகும் புரள்வாக பின்வரும் தொகைகளைக் கொண்டுள்ள ஒவ்வொரு ஆளும் அல்லது பங்குடமையும் பொருளாதார சேவைகள் கட்டணத்திற்காகப் பதிவு செய்தல் அவசியமாகும் :

அ) 2011.04.01 முதல் 2017.04.01 வரையான காலப் பகுதியில் 50 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேல், மற்றும்

ஆ) 2017.04.01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் எந்தவொரு காலாண்டிலும் 12.5 மில்லியன் ரூபா

II. எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பொருளாதார சேவைகள் கட்டண வரிப் பொறுப்பு

- 2016.04.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தினதும் பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய் விற்பனை மூலமான புரள்வின் மீது பொருளாதார சேவைகள் கட்டணம் விதியாகும்.
  - ஏதேனும் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் 2016.04.01 முதல் 2017.03.31 வரையான காலப் பகுதியில் எந்தவொரு காலாண்டிற்குமான வரிவிதியாகும் மொத்தப் புரள்வு 50 மில்லியன் ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்டதாகக் காணப்படுதல், மற்றும்
  - 2017.04.01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் எந்தவொரு காலப்பகுதியிலும் 12.5 மில்லியன் ரூபா ஆகக் காணப்படுதல்
- எரிபொருள் நிரப்பு நிலையமொன்றின் வரிப் பொறுப்புடைய புரள்வு, அதன் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் தொடர்புடைய புரள்வு மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களினதும் சேவைக் கட்டணங்களினதும் மொத்தப் புரள்வு என்பவற்றின் 1/10 பகுதியாக அமையும்.

### விதியாகும் பொருளாதார சேவைகள் கட்டண வீதம்

2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொருளாதார சேவைகள் கட்டணம் 0.25% இலிருந்து 0.5% வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

வரி விதிப்பு எல்லை 50 மில்லியன் ரூபாவிலிருந்து 12.5 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டு, வருமான வரி விதியாகின்றதா அல்லது இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது அனைத்து நிறுவனங்கள் மீதும் விதியாக்கப்பட்டிருப்பதனால், இன்னும் சில நிறுவனங்கள் பொருளாதார சேவைகள் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்புடையதாக மாறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

அதனால் பொருளாதார சேவைகள் கட்டணம் விதியாகின்ற, எனினும் இதுவரையில் அதனைச் செலுத்தியிராதவர்கள், 2017 டிசம்பர் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் காலாண்டுக்கான பொருளாதார சேவைகள் கட்டணக் கொடுப்பனவுகளை நிலுவைகளுடன் செலுத்துமாறு கேட்கப்படுகின்றார்கள்.

இந்த அறிவித்தலுக்கு இணங்கச் செயற்படாதவர்களுக்கு எந்தவொரு சலுகையும் வழங்கப்படமாட்டாது.

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 1944 எனும் இலக்கத்தினை அழைப்பதனூடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.ird.gov.lk

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக